பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

18 11 2024 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நைஜீரியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்திய வம்சாவளியினர் குறிப்பிடத்தக்க அளவில் பங்காற்றியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.
- பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- அஇஅதிமுக ஆட்சியின்போது கொண்டுவரப்பட்ட திட்டங்களை செயல்படுத்த மாநில அரசு முன்வர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.
- தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளின் ஓரிரு இடங்களில் அடுத்த 6 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- அமெரிக்காவில் நடைபெற்ற உலக கேரம் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த காசிமா 3 தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

நைஜீரியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்திய வம்சாவளியினர் குறிப்பிடத்தக்க அளவில் பங்காற்றியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அபுஜாவில் நேற்று இந்தியா வம்சாவளியினரிடையே உரையாற்றிய அவர், இந்திய நிறுவனங்கள் அந்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு வலுசேர்த்து வருவதாக கூறினார்.

நைஜீரியாவில் உள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள் யோகக் கலை மற்றும் ஹிந்தி மொழியை பிரபலப்படுத்தி வருவதற்கு பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

நைஜீரிய நாட்டின் உயரிய விருது தமக்கு வழங்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்துக்கொண்ட அவர், இந்த விருதை இந்திய மக்களுக்கு அர்ப்பணிப்பதாக கூறினார்.

இந்தியாவின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி 30 மடங்கு அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த பிரதமர், நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பாதுகாப்பு சாதனங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

முன்னதாக அந்நாட்டு அதிபர் Bola Ahmed Tinubu-ஐ சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

இதனையடுத்து இருநாட்டு தலைவர்கள் முன்னிலையில் 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

தமது நைஜீரிய பயணத்தை முடித்துக்கொண்ட பிரதமர், ஜி-20 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரேசில் சென்றடைந்தார்.

அங்கு அவருக்கு வேத மந்திரங்கள் முழங்க சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த உச்சிமாநாட்டில் பல்வேறு சர்வதேச விவகாரங்களில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து பிரதமர் விரிவாக எடுத்துரைக்கிறார்.

இந்தப் பயணத்தின்போது பல்வேறு நாட்டுத் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தமது பயணத்தின் இறுதிக்கட்டமாக கயானா செல்லும் பிரதமர், இம்மாதம் 21ஆம் தேதி தாயகம் திரும்புகிறார்.

<<<<>>>>

மூத்த இந்திய தகவல் சேவை அதிகாரியும், மறைந்த குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் முன்னாள் பத்திரிகை செயலாளருமான எஸ்.எம். கான் புதுதில்லியில் நேற்று காலமானார்.

1982ஆம் ஆண்டு இந்திய தகவல் சேவை அதிகாரியாக பொறுப்பேற்றுக்கொண்ட அவர், தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் செய்திப்பிரிவு தலைமை இயக்குநராகவும் பணியாற்றினார்.

பத்திரிகை தகவல் அலுவலகத்தில் நீண்டகாலம் பணிபுரிந்த அவர், தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் பல்வேறு பிரிவுகளிலும், மத்திய புலனாய்வுத் துறையிலும் திறம்பட பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், குழந்தைகள், மாணவர்கள், பெண்கள் ஆகியோரின் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை பட்டியலிட்டார்.

2026ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கில் தொண்டர்கள் பாடுபட வேண்டும் என்று திரு. உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

அனைத்து மக்களின் நலன்களுக்காக தமிழக அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில வேளாண் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

தருமபுரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்கு மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறையின் அனுமதி கிடைத்துள்ளதாக கூறினார்.

நடப்பு நிதியாண்டில் 2 ஆயிரத்து 408 கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 779 நபர்களுக்கு ஆயிரத்து 237 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்குத் தேவைப்படும் உரம் மற்றும் இடுபொருட்களை குறைந்த விலையில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

தூத்துக்குடியில் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிலம்பாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் குழந்தைகளைப் பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

அஇஅதிமுக ஆட்சியின்போது கொண்டுவரப்பட்ட திட்டங்களை செயல்படுத்த மாநில அரசு முன்வர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

சேலம் மாவட்டம் மேச்சேரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், கோதாவரி – காவிரி நதிகள் இணைப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு, தெலங்கானா மற்றும் ஆந்திர மாநில அரசுகள்

ஒப்புதல் அளித்துள்ள நிலையில், திமுக தலைமையிலான மாநில அரசு இத்திட்டத்தை கிடப்பில் போட்டுள்ளதாக குறை கூறினார்.

மேட்டூர் அணை உபரிநீர் திட்டம், அத்திக்கடவு - அவினாசி திட்டம், ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கால்நடை ஆராய்ச்சிப் பூங்கா உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் இருப்பதை திரு. எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளின் ஓரிரு இடங்களில் அடுத்த 6 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாலத்தீவு, இந்தியப்பெருங்கடல் பகுதி முதல் தென்கிழக்கு அரபிக்கடல் வரை நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியில் நேற்று பரவலாக மழை பெய்தது. அப்போது எதிர்பாராதவிதமாக மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

யுக்ரைனில் உள்ள மின் உற்பத்தி கட்டமைப்புகளை குறிவைத்து ரஷ்யா நடத்திய ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர்.

------------

சிரியா மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் ஊடகப்பிரிவு தலைவரான முகமது Afif உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

------------

பங்களாதேஷில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டு முதன்மை ஆலோசகர் திரு. யூனுஸ் தெரிவித்துள்ளார்.

------------

இலங்கையில் புதிய அமைச்சரவையின் பதவியேற்பு விழா அந்நாட்டு அதிபர் திரு. அநுர குமார திசநாயகே தலைமையில் இன்று நடைபெறுகிறது.

------------

குளிர்காலத்தை ஒட்டி, உத்தராகண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் உள்ள பத்ரிநாத் கோவில் மூடப்பட்டுள்ளது.

------------

தில்லி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்துள்ளதாக மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

------------

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெற்ற வாக்காளர் சிறப்பு சுருக்க முறைத் திருத்தத்தில் 20 ஆயிரத்து 679 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

------------

திண்டுக்கல் மாவட்டத்தில் 100 சதவீத வாக்காளர் சேர்க்கையை வலியுறுத்தி பள்ளி தலைமை ஆசிரியர் பாடல் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தியது பாரட்டைப் பெற்றுள்ளது.

------------

தென்காசி மாவட்டத்தில் வாக்காளர் சிறப்பு முகாம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

அமெரிக்காவில் நடைபெற்ற உலக கேரம் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த காசிமா 3 தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

மகளிர் ஒற்றையர், இரட்டையர் மற்றும் குழு போட்டி ஆகிய 3 பிரிவுகளில் அவர் இந்த தங்கப் பதக்கங்களை வென்றார்.

இப்போட்டியில் பதக்கம் வென்று சாதனை படைத்த அவருக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஆடவர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீநிவாஸ் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

------------

பஹ்ரைன் சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் Prakriti Barat பட்டம் வென்றார்.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர், 21-13, 21-17 என்ற செட் கணக்கில் இலங்கையின் ரணித்மா லியனகே-வை வென்றார்.

--------------

உலக வில்விதை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஜோதி சுரேகா தங்கப்பதக்கம் வென்றார்.

லக்ஸம்பர்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் காம்பவுண்ட் பிரிவில் அவர், பெல்ஜியத்தின் Passmeeri Marita-வை வென்றார்.

<<<<The End>>>>